[20th April 1959

(c) A sum of (Rs. 10,000) rupees ten thousand only has been invested by the Government of Madras in 10 'C' Class shares of Rs. 1,000 each, of the society.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த சொஸைடி மூலம் நமது மாகாணத்தில் உள்ள கைத்தறித் துணிகள் விநியோகிக்கப் படுகிறதா ? அப்படியானால் எந்த அளவு இந்த சொஸைடி நமது மாகாணத்திலுள்ள கைத்தறித் துணிகளை ஊக்குவிப்பதற்கு முயற்சி எடுக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அகில இந்தியாவிலும் இருக்கக்கூடிய கைத்தறித் துணிகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்வதற்காக இந்த "பப்ளிக் சொஸைடி" ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் துறையிலே நமது ராஜ்யத்திலுள்ள துணிகளும் வாங்கி விற்பனை செய்யப்படுகிறது.

Musalveli Irrigation

*19 *Q.*— SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலுகா, தில்லை விளாகம் முதல் வெளி நிலங்கள் சம்மந்தமான நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் இந்த வருஷம் எத்தனை ஏக்கர்களுக்கு பாசனவசதி அளிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Nil. (The plans and estimates for the scheme are now being prepared by the Public Works Department.)

SRI A. VEDARATHNAM : இந்தத் திட்டம் எப்பொழுது முடிவுக்கு வரும் ? அடுத்த ஆண்டிலாவது பசுசூல் வருவதற்குள் இந்தப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. : அதிகப்படியான பாசனவசதிக்கு 6 க்யூசெக்ஸ் தேவையிருக்கிறது. அதற்கு ஒரு "ஸப்லிமெண்டரி ஸ்லூயிஸ்" போட்டுவிட்டால் போதும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி இப்பொழுது 'பிளான்ஸ் அன்டு எஸ்டிமேட்ஸ்' தயார் செய்யப்படுகிறது. ஆகையினால் தாமதம் இருக்காது.

Family Planning

* 20 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் குடும்பக் கட்டுபாடு திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு ரூபாய் செலவிட திட்டமிட்டிருக்கிறது ?

(ஆ) அத்திட்டத்தின் விபரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Approximately Rs. 2,14,229 by this Government.

(b) A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VII on page 51 infra.